# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No. 302/2006 தேதி-10.06.2026
(DW.1) – ராஜி

**வாதி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1. என் அப்பா பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2.500 சென்ட் சொத்தாகும். அந்த சொத்தின் நீளமும், அகலமும் எவ்வளவு என்றால் 871 சதுர லிங்ஸ் ஆகும், நீளமும், அகலமும் குறிப்பிட்டு சொல்ல முடியாது. என் அப்பா விலைக்கு கொடுத்த பிறகு அந்த வழிபாதை அவருடைய வீட்டிற்கு பயன்படுத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழிப்பாதை வாதியின் வீட்டிற்கு சென்று முடிவுடையும் என்றால் சரியல்ல, வாதியின் வீட்டின் கிழக்கு பக்கம் சென்றடையும்.

2. வாதியின் வீட்டின் கிழக்கு பக்கம் என்ன இருக்கிறது என்றால் வாதி அவருடைய மகனுக்கு வீடு கட்ட பவுண்டேஷன் அமைத்துள்ளார். நான் சொல்வது போல வாதியின் சொத்தின் மேற்கற்றத்தில் பாதை சென்றடையாது என்றால் சரிதான். கிழக்கு பக்கம் வாதியின் வீட்டின் முன்பக்கம் அல்லது பின்பக்கம் என்று சென்று சேருமா என்றால் முன்பக்கம் ஒரு முடிவில் சென்று சேரும். வாதியின் சொத்தில் உள்ள வீடு மேற்கு பக்கம் பார்த்து அமைந்துள்ளது என்றால் சரிதான்.

3. என் அப்பா விலை கொடுத்த பாதை நேராக செல்லுமா அல்லது வளைவான பாதையா என்றால் நேரான பாதை தான், இரண்டு சமாதிகள் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான், அது வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அமைக்கப்பட்டதாகும். என் அம்மா ராஜம்மாள் எப்போது இறந்தார் என்றால் 2006 ல் இறந்தார். இந்த வழக்கு தாக்கல் செய்த பிற்பாடு தான் அவர் இறந்தார் என்றால் சரிதான். என் அம்மாவுடைய சமாதியும், என் அப்பாவுடைய சமாதியும் சேர்ந்துள்ளதா அல்லது தனித்தனியாக உள்ளதா என்றால் சேர்ந்து தான் உள்ளது.

4. மேற்சொன்ன இரண்டு சமாதிகளும் வாதியின் வீட்டிற்கு நேர் எதிரே அமைந்துள்ளது என்றால் இல்லை. வாதியின் வீட்டை சுற்றி அமைக்கப்பட்டுள்ள காம்பவுண்ட் சுவர் மேற்சொன்ன பாதையில் இருந்து எவ்வளவு தூரத்தில் முடியும்

என்றால் சுமார் 10 முதல் 15 அடி தூரத்தில் முடியும். நீதிமன்ற ஆணையர் பார்வையிட வந்த போது மேற்சொன்ன 10 முதல் 15 அடி தூரத்தில் பாதை அமைந்துள்ளதை நான் காண்பித்துக் கொடுத்தேனா என்றால் இல்லை. பாதைக்கும், என்னுடைய சொத்திற்கும் இடையே வேலியோ, காம்பவுண்ட் சுவரோ இருக்கிறதா என்றால் இல்லை.

5. நீதிமன்ற ஆணையர் வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட வந்த போது 18 வது கண்டத்தை அளந்து பார்த்தாரா என்றால் 15 முதல் 25 வரையுள்ள கண்டங்களை அளந்து பார்த்தார்கள். 15 முதல் 25 வரையுள்ள கண்டங்களின் ரீ சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண்.2326, ரீ சர்வே எண்.448/4A ஆகும். ரீ சர்வே எண்.448/4A இல் மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 5 ஏக்கர் 52 சென்ட் ஆகும். என் அப்பா விலைக்கு கொடுத்ததாக சொல்லப்படும் சொத்து ரீ சர்வே எண்.448/4A க்கு உட்பட்டு தான் வருகிறது என்றால் சரிதான்.

6. என் அப்பா இறந்த சமயத்தில் அவரின் உடலை அடக்கம் செய்ய குழித்தோண்டிய போது வாதி ஆட்சேபணை செய்தாரா என்றால் இல்லை. வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் மற்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தார் என்றால் காவல் நிலையத்தில் புகார் எதுவும் தாக்கல் செய்யவில்லை, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் Writ மனு தாக்கல் செய்தார்.

7. வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் காவல் நிலையத்தில் இருந்து காவலர்கள் வந்து விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. வாதி ஆட்சேபணை செய்ததையும் கண்டுகொள்ளாமல் சமாதியை ஏற்படுத்தினேன் என்றால் இல்லை, வாதி சொத்தை விலைக்கு வாங்கிய உடனே அளந்து பார்த்து கல் அமைக்கப்பட்டது. வாதியின் வீட்டிற்கு மின் இணைப்பு வழக்கில் சொல்லப்பட்டுள்ள பாதையின் வழியாக தான் கொண்டு செல்லப்படுகிறது என்றால் இல்லை.

8. மின் இணைப்பு வாதியின் வீட்டிற்கு எவ்வாறு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அவர் விலைக்கு வாங்கிய 2 சென்ட் சொத்திற்காக வழிப்பாதையாக தான் மின் இணைப்பு செல்கிறது. மின் இணைப்பு சமாதியின் வடக்கு பக்கமாக செல்கிறதா

அல்லது தெற்கு பக்கமாக செல்கிறதா என்றால் தெற்கு பக்கமாக செல்கிறது. வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கையில் மேற்சொன்ன சமாதிகள் வாதியின் வீட்டிற்கு நேர் எதிரே அமைந்துள்ளதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. என்னுடைய சொத்திற்கும், வாதியின் சொத்திற்கும் இடையே எல்லை கற்கள் நடப்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில் எத்தனை கற்கள் உள்ளது என்றால் நான்கு கற்கள் நடப்பட்டுள்ளது. ஆணையரிடம் நான்கு எல்கைகற்களை காண்பித்துக் கொடுத்தேனா என்றால் காண்பித்து கொடுத்தேன். Electric Box எத்தனை அடி வீதி, அகலத்தில் கட்டடப்பட்டுள்ளது என்றால் 3 அடி நீளமும், 1 1/2 அகலமும் இருக்கும்.

10. மேற்சொன்ன கட்டுமானம் எத்தனை வருடங்களாக அமைந்துள்ளது என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. கட்டுமானத்தில் இருக்கக்கூடிய மின் இணைப்பு யாருடையது என்றால் வாதியுடையதாகும். கட்டுமானத்திற்கும், வாதியின் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 50 அடி தொலைவு இருக்கும். நான் சொல்வது போல மேற்சொன்ன மின் இணைப்பு வாதியினுடையதல்ல என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வீட்டில் தான் வாதியின் மின் இணைப்பு Meter Box அமைந்துள்ளது என்றால் சரியல்ல.

11. Meter Box அமைந்துள்ளது வாதியின் தகப்பனார் வாதியின் சகோதிரிக்கு கொடுத்த பாதையில் தான் அமைந்துள்ளது என்றாலும், இந்த வழக்கு பாதைக்கும் Meter Box க்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட வந்த போது வாதியின் சகோதிரிக்கு 4 அடி பாதை அவரது தந்தை கொடுத்ததை நீதிமன்ற ஆணையர் தவறாக இவ்வழக்கு பாதை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. வாதியினுடைய தகப்பனார் வாதியின் சகோதிரிக்கு கொடுத்த 4 அடி பாதை தெற்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் அமைந்துள்ளது என்றால் சரியல்ல, அவ்வாறு பாதை ஏதும் இல்லை.

12.நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், அங்கு மேற்சொன்னவாறு 4 அடி பாதை உள்ளது என்றாலும், அதற்கான ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் தகப்பனார் வாதியின் சகோதிரிக்கு 4 அடி பாதையை 29.01.1998 ல் கிரைய ஆவண எண்.169/1998 ன் படி மீரா ரமணி பாய்க்கு அவருடைய சொத்திற்கு வடக்கற்றம் கிழமேல் 4 அடி அகலத்தில் பாதை உபயோகத்திற்கு தனது நீக்கி மீதி சொத்தில் கிழக்கணைய என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை.

13.நான் இந்த வழக்கிற்காக அவ்வாறு பாதை ஏதும் இல்லை என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன ரமணி பாயிக்கு எழுதிக் கொடுத்த 4 அடி பாதைக்கு வடக்கு பக்கம் தான் வாதி 4 அடி பாதையை என் அப்பாவிடம் இருந்து விலைக்கு பெற்றார் என்றால் சரியல்ல. வாதிக்கு என் அப்பா கிரையம் கொடுத்த சொத்தில் தான் என் அப்பா மற்றும் என் அம்மாவின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

14.வாதியின் வீடு என் அப்பாவிடமிருந்து பாதையை விலைக்கு வாங்குவதற்கு முன்பே அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பாதை வாதியின் வீட்டை சென்றடையாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அவருடைய அறிக்கையில் காண்பித்துள்ள பாதை வாதியின் வீட்டின் எந்த திசையில் சென்று சேரும் என்றால் தெற்கு கிழக்காக சென்று சேரும்.

15.நீதிமன்ற ஆணையர் அவருடைய அறிக்கையில் காண்பித்துள்ள பாதை வாதியின் வீட்டில் முடிவடையும் போது எத்தனை அடி அகலத்தில் இருக்கும் என்றால் 10 அல்லது 15 அடி அகலத்தில் இருக்கும். வாதிக்கு விலைக்கு கொடுத்த சொத்தில் தான் இரண்டு சமாதிகளும் அமைக்கப்பட்டுள்ளது என்றாலும், அதை அகற்றப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல. வாதியின் பாதையை இடையூறு செய்ய வேண்டி வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

16.நான் வாதியின் வீட்டிற்கு சென்று வரும் பாதையை 02.05.2006 ல் இடையூறு செய்ததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எந்த ஆட்சேபணை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வாதி கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல, வாதி எங்களை கஷ்டப்படுத்த வேண்டி தாக்கல் செய்த பொய் வழக்காகும். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலம் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல.